IN THE COURT OF THE II ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE OF SALEM

O.S. No.119/2016

சாட்சி : PW5

பெயர் : பெருமாள் தேதி: 14-12-2023

<u>2ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>

வாதிகள் என்னுடைய உறவினர்கள் என்றால் ஆமாம். இந்த வழக்கில் சாட்சியம் அளிக்க நீதிமன்றத்தில் இருந்து சம்மன் ஏதும் வரவில்லை என்றால் ஆமாம். வாதிகள் அழைத்ததன் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. தாவா என்ன பரிகாரத்திற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியாது. வழக்கு விவரங்கள் எனக்கு தெரியாது என்றால் ஆமாம். நான் 1975ம் வருடம் பிறந்தேன். நான் பிறப்பு முதல் திப்பம்பட்டி கிராமத்தில் வசித்து வருகிறேன் என்றால் ஆமாம். தாவா சொத்து ஆதியில் யாருக்கு பாத்தியப்பட்டது என்று எனக்கு தெரியாது. தாவா சொத்திற்கு அருகில் யாருக்கு பாத்தியப்பட்ட நிலங்கள் உள்ளது என்று சொன்னால் தெரியும். கிழக்கு பக்கம் மாரியப்பன், ஜோதி, சபாபதி வீடு உள்ளது. மேற்கு பக்கம் பெரியசாமி, மாது மற்றும் கொண்டம்மாள் வீடுகள் உள்ளது. தெற்கு பக்கம் சுந்தரம் என்பவரின் காடு உள்ளது. வடக்கு பக்கம் தார்சாலை உள்ளது. தாவா சொத்தின் சர்வே நெம்பர் மற்றும் அதன் விஸ்தீர்ணம் எனக்கு தெரியாது. நிலம் சம்மந்தமாக பஞ்சாயத்து நடந்தது என்று சொன்னால் சரியல்ல. பஞ்சாயத்து நடந்த விவரம் எனக்கு தெரியாது. தாவா சொத்து ஆதியில் பத்துமலை என்பவருக்கு பாத்தியப்பட்டது என்றும், அவர் 1971ம் அவர் மலேசியா செல்லும் போது அந்த சொத்துக்களின் பாதியை 1ம் வாதியிடம் குத்தகைக்கு விட்டு சென்றிருந்தார் என்று சொன்னால் எனக்கு தெரியாது. தாவா சொத்தை பற்றி எனக்கு எந்த

விவரமும் தெரியாது என்றும், வாதிகள் எனது உறவினர்கள் என்பதால் அவர்கள் கேட்டுக்கொண்டதற்காக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

ஒம்/– A.M. ரவி,
இரண்டாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
சேலம்.